# பாடம் -11

# நல்லதொரு குடும்பம் பல்கலைக் கழகம்

# பெற்றோர்களின் கவனத்திற்கு

**குழந்தைகளை சிறப்பான முறையில் வளர்க்க எங்கள் நல்லதொரு குடும்பம் பல்கலைக் கழகம் வழங்கும் 40 சிந்தனைகள்**

1.ஒவ்வொரு நாளும் இரவு சிறிது நேரம் குழந்தைகளோடு கழிக்க வேண்டும் .அப்போது இன்று பள்ளியில் என்ன முக்கியமாய் நடந்தது? என்று அவர்கள் நிலைக்கு இறங்கி ஒரு நண்பர் போல கலந்து பேச வேண்டும் .

2. வீட்டுப் பாடங்கள் செய்யும் போது -புரியாவிட்டால் துணை செய்ய வேண்டும் .

3.கல்விப் பொருட்கள் எது கேட்டாலும் முடிந்த அளவிற்கு உடனே வாங்கிக் கொடுக்க முயற்சி செய்யலாம் .

4..பள்ளி விழாக்கள் -கூட்டங்கள் –பெற்றோர் நிகழ்ச்சிகள் -என்று எது வந்தாலும் சென்று கலந்துக் கொள்ள வேண்டும் .

5.நிறையப் போட்டிகளில் பங்கேற்கச் செய்யச் சொல்ல வேண்டும் அப்போது தான் ஆளுமைத் தன்மை வளர்ச்சி ஏற்படும்.

6.எத்தகைய நண்பர்களைத் தேர்ந்தெடுத்துள்ளார்கள் என்பதில் கவனமாக இருக்க வேண்டும் .சரியில்லாத நண்பராய் இருந்தால் புரியும்படி உணர்த்தி விளக்கி விடச் சொல்ல வேண்டும் . நல்ல நட்பு வளர்த் துணைப் புரிய வேண்டும் .

7.மதிப்பெண்கள் குறைவாக வாங்கி வந்தால் சில பெற்றோர்கள் வெறுத்துத் திட்டுகின்றன .ஆனால் பிள்ளையோடு சேர்ந்து -ஏன் மார்க் குறைவு ? எதனால் இப்படி ஆகிவிட்டது ? பாடம் புரியவில்லையா ? ஆசிரியர் சொல்லிக் கொடுக்கும் முறை சரியில்லையா ? அல்லது நீ நிறைய நேரம் படிக்கவில்லையா ? என்ன தப்பு நிகழ்ந்தது ?என்று அவனாகக் கண்டுபிடிக்கத் துணை புரிய வேண்டும் . புத்தகக் குறிப்பு வேறு என்ன வேண்டும் ? என்று கேட்டுத் தடை ஏதேனும் இருந்தால் நீக்கிக் கொடுக்க வேண்டும்.

பிள்ளையிடம் தவறிருந்தால் –நீ அறிவுள்ளவன்- திறமையுள்ளவன் .அதை வெளிப்படுத்துவதில்தான் குறை .அதனால் தான் குறைவான மதிப்பெண்கள் .அடுத்த முறை நீ நன்கு படித்தால் மார்க் வாங்குவாய் என்று எதிர்பார்க்கிறேன் . நிச்சயம் உன்னால் , முடியும் . என்று ஊக்கமான வார்த்தைகளைச் .சொல்லுங்கள் ..நல்லதொரு நம்பிக்கையை -எதிர்பார்ப்பை வெளிப்படுத்துங்கள் .அது பிள்ளையின் உள்ளத்தில் ஓர் தூண்டுதலை ஏற்படுத்தும் .அது போக மார்க் குறைவாயிருந்தால் கூடத் திட்டாமல் என் மேல் அன்புவைத்து, ,நம்பிக்கை வைத்து எதிர்பார்க்கின்றன .அதற்காக நான் படித்து மதிப்பெண்கள் பெறுவேன் என்று உறுதியுடன் சாதிப்பர் .

8.சிறு வயதில் கணக்குப் பாடத் திறமையை வளர்க்க கீழ்கண்டவற்றை செய்யலாம் ;

*மாடிப்படியை எண்ணிச் சொல்லக் சொல்க

*காய்கறிகளை எண்ணுதல் .

*காசு கொடுத்து கடையில் அவர்களே வாங்கி கணக்குப் பார்த்தல் .

*சின்னச் சின்ன மணக் கணக்கு கொடுத்தல்

*செஸ் விளையாடுதல் .

*வயது கண்டு பிடித்தல் .

போன்றவற்றை செய்யச் சொல்லலாம்

9.மூளைக்கு வேலை தர சின்ன சின்ன புதிர்கள் உள்ள புத்தகம் வாங்கிக் கொடுத்து பதில் எழுத்தச் சொல்க.

10.அடிக்கடி நூல் நிலையங்களுக்கு கூட்டிச் சென்று படிக்கும் பழக்கத்தை உருவாக்குக .

11.பெரிய நகரங்களுக்குச் செல்லும் போது பெரிய நூல் நிலையங்களுக்கு கூட்டிச் சென்று காட்டுக .அங்கு ஏராளமான நூல்களை பார்க்கும் போது கல்வி பற்றி ஓர் விழிப்புணர்வு ஏற்படும் .

12.அருங்காட்சியகம் ,பிளேனடோரியம் முதலியவற்றிற்கு அழைத்து செல்க .

13.எஞ்சினீயரிங் செல்ல ஆர்வம் இருந்தால் நிறைய தொழிற் சாலைகளுக்கு அழைத்து சென்று காட்டுக ..அது போலவே குழந்தைகளின் ஆர்வத்திற்கு தகுந்தவாறு பல இடங்களுக்கு அழைத்துச் செல்லலாம் .

14.பல நல்ல கூட்டங்களுக்கு அழைத்துச் செல்க .

15.கோடை விடுமுறைகளில் பல பயிற்சி மூகாம்களுக்கு அனுப்புக .

16.ஏதேனும் ஒரு பாடத்தில் பலவீனமாக இருந்தால் கோடை விடுமுறையிலேயே டியூசன் வைத்து .வரப் போகிற பாடத்தைப் படித்தல் வேண்டும் . அதன் பின் வகுப்பிற்குப் போனால் அது எளிதில் விளங்கும். ஆசிரியர் கேள்விக் கேட்டால் பதில் சரியாக சொல்வர் .பாடம் புரிவதால் ஆர்வம் ஏற்படும் .அந்தப் பாடத்தில் சிறப்பர்

17. பொதுவாக குழந்தைகளுக்கு நாளை நடத்தப போகும் பாடங்களை இன்று ஒரு முறை சாதாரணமாய்ப் படிக்கச் சொல்ல வேண்டும் .சில புரியும் சில புரியாது அந்த கேள்விகளுடன் வகுப்புக்கு சென்றால் . பாடங்கள் புரியும் ..

பொதுவாக சில விஷயங்கள் பாடங்களைப் பற்றி தங்களுக்கு தெரிந்ததை பெற்றோர்கள் சொல்லலாம் அவை ஆர்வத்தைத் தூண்டும் .

18.எப்படி படிப்பது ,எப்படி நினைவில் வைப்பது இது போன்ற பொதுவான கற்கும் முறைகள் சம்பத்தமான நூல்கள் , கேசட்டுகள் மூலம் பெற்றோர் கற்று பின் பிள்ளைகளுக்கு வழி காட்டலாம்

19. டீ .வி பார்க்க ஒரு குறிப்பிட்ட நேரத்தை குடும்பத்தில் ஒதுக்குதல் .

20. நேர நிர்வாகம் கற்றுக்கொடுக்கவும்

21.பாட சம்பந்தமான ஆடியோ ,வீடியோ , கேசட்டுகளை அவ்வப்போது வாங்கிக் கொடுக்கவும் .

22. ஒவ்வொரு நாளும் ஏதேனும் ஒரு விஷயத்திற்காக பாராட்டச் செய்க .

23.அழகான கையெழுத்தை உருவாக்க துணை புரிக .

24. அவர்களை நண்பர்களைப் போல நடத்துதல்

25..அதிகாரம் செய்ய வேண்டாம் , அடக்கு முறை வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டாம்

26. எதற்கும் காரண காரியங்களைச் சொல்லி விடுங்கள் .

27.உங்களது பொருளாதாரம் சற்று சிக்கலாக இருந்தால் ,அதே சமயத்தில் கல்விக்காக -திறமையை ,-அறிவை வளர்ப்பதற்காக எவ்வளவு கஷ்டப்பட்டு பணம் கொடுக்காத் தயார் என்பதை மனப்பூர்வமாக சொல்லுங்கள் .அது தெரிந்தால் வீண் செலவுகளை அவர்களே குறைப்பர் .ஒவ்வொரு முறையும் நீங்கள் வலியுறுத்தி தலையிட வேண்டியதில்லை .பொறுப்பை அவர்கள் ஏற்றுக் கொள்ளும்படி புரிய வைத்துவிட்டால் போதும் .

28. கணக்குகளை தினமும் எழுத்தாச் சொல்லுங்கள் .அவ்வாறு எழுதி வருவதன் மூலம் வீண் செலவுகளைத் தவிர்க்க அது துணை புரியும் என்பதை எடுத்து சொல்லுங்கள் .

29. அவர்கள் பெயரில் அக்கவுண்ட் ஏற்படுத்தி அவர்கள் பணம் போடவும் எடுக்கவும் பழக்குங்கள் .

30 போஸ்ட் ஆபீஸ் வேலைகள் ,பேங்க் வேலைகள் ,மற்ற அலுவலக வேலைகள் இவற்றையெல்லாம் கல்லூரி செல்லும் வயதில் கற்றுக் கொடுங்கள் .உடனே அழைத்துச் செல்லுங்கள் .பல இடங்களுக் தனியே சென்று வர வாய்ப்பளியுங்கள் .

31.அவர்கள் வீட்டிற்கு வரும் நேரங்களைக் கண்காணித்து வாருங்கள் .லேட்டாக வந்தால் மெதுவாக காரணங்களைக் கேளுங்கள் இரண்டு ,மூன்று முறை லேட்டாக வந்தால் தனியாக உட்கார வைத்துப் பேசி ,அதை தவிர்க்க சொல்லுங்கள் .

32. அவர்களின் நண்பர்கள் பற்றி மிக்க கவனமாக இருங்கள் .சரியில்லாத நண்பர்களோடு சேர்ந்தால் ஆரம்பத்திலேயே அது எந்த அளவு வாழ்வினைப் பாதிக்கும் என்று எடுத்துக் கூறி ,அவர்களை தவிர்க்கச் சொல்லுங்கள்

நல்ல நண்பர்கள் சேர்ந்தால் அவர்களுக்கு மதிப்பளித்து நன்றாக அவர்களை நடத்துங்கள் .உங்கள் குழந்தைகளைப் போல நடத்தி, குடும்பத்துடன் அவர்களின் வீடுகளுக்கு சென்று வாருங்கள் . அவர்கள் வீட்டு நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்ளுங்கள்.

இப்படி நல்ல நண்பர்களுக்கு கொடுக்கும் அங்கீகாரத்தைப் பார்த்து விட்டு , வேண்டாத நண்பர்களை அவர்களே தவிர்ப்பர் .
டீன் .ஏஜ் நட்பு -எந்த அளவு வாழ்வின் உயர்வுக்கோ -வீழ்ச்சிக்கோ காரணமாகிறது என்பதை உதாரணங்கள் மூலம் விளக்குங்கள் .

பள்ளியி மிக உயரிய மதிப்பெண்களை பெற்று கல்லூரிகளில் தீய நட்பின் காரணத்தினால் படிப்பிலும் ,ஒழுக்கத்திலும் தோல்வியுற்று பல மாணவர்கள் பலர் உள்ளனர் .

33. நம்புங்கள் ஆனால் எச்சரிக்கையாயிருங்கள் .அவர்கள் மேல் ஓர் கண் இருக்கட்டும் தங்கள் கவனிக்கப்படுகிறோம் .தீயவை செய்தால் உறவு பாதிக்கப்படும் என்ற உணர்வு அவர்களுக்கு மேலோங்கி இருக்க வேண்டும்

34. எங்கு போனாலும் சொல்லிவிட்டுத்தான் போக வேண்டும் .மறக்க வேண்டாம் என்று அன்புடன்-கண்டிப்புடன் சொல்லுங்க .

35. தவறுகளை செய்யும் பொது கண்டித்து ,உணர வையுங்கள் .ஆனால் வெறுக்க வேண்டாம் .எப்போதும் ஒதுக்க வேண்டாம். ஏற்றுக் கொள்ளுங்கள் .

36. அன்பு ,காதல் ,நட்பு ,உடல் கவர்ச்சி ,பருவ மயக்கம் இவை பற்றி தெளிவாக உணர வையுங்கள் .

37. டீன் ஏஜ் -ல் நிறைய உடல் சக்தி ,மன சக்தி இருக்கிறது . நல்ல குறிக்கோளும் இலட்சியங்கள் சாதிக்கும் உணர்வுகளும் இருக்கும் பொது - அந்த சக்தி நல்வழிப்படுத்தப்படும்போது – மற்ற ஈர்ப்புகள் ஒன்றும் செய்ய முடியாது ஆகவே பெற்றோர்கள் குழந்தைகளின் இலட்சியங்களை குறிக்கோளை அமைக்க துணை புரிய வேண்டும் .

38. குழந்தைகளை -அவர்களுக்கு ஆர்வமுள்ள துறைகளில் -அவர்களுக்கு திறமையுள்ள துறைகளில் அனுப்ப வேண்டும் .

பெற்றோர்களுக்குப் பிடித்த துறைகளில் - சமுதாய அங்கீகாரம் -பணம் நிறையச் சம்பாதிக்கும் துறைகளில் -சில பெற்றோர்கள் வற்புறுத்திச் செல்ல வைக்கின்றனர் .

இன்னும் சில பெற்றோர்கள் தாங்கள் கனவு கண்டு அடைய முடியவில்லை .அந்தத் துறைகளில் தன் மகன் அல்லது மகள் வரட்டும் ' என்று திணித்து அனுப்புகின்றனர் .

இப்படி விருப்பமில்லாமல் மற்றவர்களுக்காக சில படிப்புகளுக்கு சென்று மாணவ ,மாணவிகள் அதில் ஈடுபாடு இல்லாமல் சாதாரண மனிதராக வாழ்வை நடத்துவர் , சிலர் தோல்வியும் அடைகின்றனர் .

குழந்தைகள் விரும்பிய துறைகளுக்கு அவர்களை அனுப்பினால் வாழ்வுப் பொறுப்பை அவர்கள் ஏற்று வெற்றி பெறுவார் என்ற அடிப்படை உண்மையை ஏற்று செயல்படுங்கள் .

39. ஒவ்வொரு வீட்டிலும் ஒரு கம்ப்யூட்டர் அவசியம் internet மூலம் உலகை வீட்டிற்குள் கொண்டு வந்து விடலாம்

40. பல indoor & outdoor games கலந்து கொள்ள வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொள்ளுங்கள் . செஸ் விளையாடுதல் இடது மூளையை தூண்டும் .